மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *ஆகவே, பிச்சை எடுக்கின்ற தொழிலை ஒழிப்பதற்கு அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பவர்களை உடனடியாக தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கடுமையாக நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, அவர்களைத் தங்க வைப்பதற்கென்று திருவள்ளூர் மாவட்டம், மேல்பாக்கத்திலே ஒரு மிகப் பெரிய மறுவாழ்வு மையம் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 69 பேர் இதேபோன்று ஆலயங்களிலே, பொது இடங்களிலே பிச்சை எடுப்பவர்களைக் கண்டறிந்து, பிச்சை எடுப்பது தவறு என்பதை அவர்களுக்கு வலியுறுத்தி, மறுவாழ்வு மையங்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவு, உடை, பயிற்சி முதற்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

பொறியியல் கல்லூரி

***6869—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 2]

(அ) அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் எஸ்டேட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் எஸ்டேட் அருகில் தொழில் கல்வி நிலையத்தில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டுமென்றால் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் அதாவது AICTE சட்டம் 1987–ன்கீழ் பொறியியல் கல்லூரி துவங்குவதற்கு சில வரைமுறைகள், சில நிபந்தனைகள் விதித்துள்ளது. அதன்படி பார்த்தால், ஒரு பொறியியல் கல்லூரி துவங்க வேண்டுமென்றால் பெருநகரப் பகுதியாக இருந்தால் 2½ ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. கிராமப் பகுதியாக இருந்தால் 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மேலும், கல்லூரி அமையவுள்ள இடத்திற்கு போக்குவரத்து, சுற்றுச்சூழல் போன்ற அடிப்படை வசதிகள் இருக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, தொடரும் செலவினமாக, அதாவது ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் மூலமாக அதற்காக மட்டும் செலவு ரூ. 33.54 கோடி பணம் தேவைப்படுகிறது. தொடராச் செலவினமாக கட்டடங்கள் கட்டுவது, தளவாடச் சாமான்கள் வாங்குவது, கம்ப்யூட்டர் வாங்குவது இதுபோன்ற பொருட்களை வாங்குவதற்கு ரூ.93.63 கோடி செலவாகிறது. ஆகவே, ஒரு பொறியியல் கல்லூரி தொடங்குவதற்கு மேற்கண்ட நிபந்தனைகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தேவையை அறிந்து எதிர்காலத்தில் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய*

பொற்பாதங்களை வணங்குகிறேன். காஞ்சிபுரத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புப் பொறியியல் கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணியானது மிகவும் மந்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணியை மேலும் விரைவுபடுத்தி இந்தக் கல்வி ஆண்டிலேயே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்க அரசு முன்வருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் உள்ள அரசு பொறியியல் உறுப்புக் கல்லூரி தொடங்கப்பட்டு அங்கே மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கட்டடப் பணிகள் தாமதமாக நடைபெற்று வருகின்றன என்பதை இங்கே அவைக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்தக் கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே உயர் கல்வித் துறை மூலமாக அந்தத் துறை அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி கூடிய விரைவிலேயே முடிந்துவிடும். அந்தப் பணி முடிக்கப்பட்டவுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்கரங்களால் கூடிய விரைவில் அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. இரா. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் ஒரு திட்டம் எனப் புத்தம் புது சாதனையைப் படைத்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

2013 ஏப்ரல் 2]

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்றத் தனித் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அங்கு ஆண்டிமுத்து ராசாவால், அடித்து வைத்திருக்கிற ஸ்பெக்ட்ரம் கொள்ளைப் பணத்தின்மூலம் வளைத்துப் போடப்பட்ட நிலங்களைத் தவிர, எந்தப் பலனையும் அந்த மக்கள் அனுபவிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் உயர் கல்வியைப் பெறும்வண்ணம், வள்ளலின் வாரிசாக விளங்கிக் கொண்டு இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, அங்கே அந்த மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்குப் புதியதாக ஒரு அரசுப் பொறியியல் கல்லூரியைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு புதிய பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டும் என்று சொன்னால், சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தை நான் சொல்லியிருக்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், தற்பொழுது தமிழகத்தில் 553 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அரசுக் கல்லூரியாக 7 கல்லூரிகளும், அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாக 3 கல்லூரிகளும், தனியார் கல்லூரி–Self Finance College-525 கல்லூரிகளும், அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 18 என மொத்தம் தமிழ்நாட்டில் 553 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன.

முற்பகல் 10–20

இந்தப் பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட இடங்கள், அதாவது எவ்வளவு மாணவர் சேர்க்கை என்றால் 2 இலட்சத்து 62 ஆயிரத்து 164 மாணவர்களுக்கு இடம் இருக்கிறது. சென்ற ஆண்டு இந்த 2 இலட்சத்து 62 ஆயிரத்து 164 மாணவர்களில், ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 491 மாணவர்கள் மட்டுமே சேர்க்கை பெற்றுள்ளனர். ஆகவே, அரசு ஒதுக்கீடாக 55,055 இடங்கள் ஏற்கெனவே மாணவர்களுக்குக் கூடுதலாக உள்ளன. அதோடுமட்டுமல்ல, மேனேஜ்மென்ட் கோட்டாவில் 23 ஆயிரத்து 618 இடங்கள் இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தைப்

பொறுத்தவரையில், பொறியியல் கல்லூரியில் சேர வேண்டுமென்று சொன்னால் அதற்குப்போதிய வாய்ப்பிருக்கிறது. தேவையான இடங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. இவற்றில் காலியாக இருந்தாலும்கூட ஏழையெளிய மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, கிராமப்புறங்களிலே ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறுகிற வகையிலே அவர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தவுடனே ஆண்டுக்கொரு கல்லூரி என்கிற அடிப்படையிலே மூன்று பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கினார்கள். இருந்தாலும்கூட, அது பின்தங்கிய மாவட்டம் என்பதால் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று எதிர்காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அங்கே ஒரு பொறியியல் கல்லூரியின் கட்டடப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கடந்த 2011 ஆம் ஆண்டு, அன்றைய மனுக்கள் குழுத் தலைவரும், இன்றைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய நேரடி ஆய்வின்போது அந்தக் கட்டடப் பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய நிறுவனமானது 2012 பிப்ரவரியிலேயே கட்டடப் பணிகள் முழுமையாக முற்றுப்பெறும். 2012 பிப்ரவரியிலே கட்டடம் திறக்கப்படும் என்கிற உறுதியை அளித்தார்கள். ஆனால், இன்றுவரையிலே அந்தக் கட்டடப் பணிகள் முற்றுப்பெறவில்லை. தற்காலிகமாக எஸ்.வி. நகர், ஜாகிர்தார் அரண்மனையிலே இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய பொறியியல் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக விரைந்து அந்தக் கட்டடப் பணியை முடித்து, கல்லூரியைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சோமசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, அதுவும் ஒரு உறுப்புக் கல்லூரி. அந்த உறுப்புக் கல்லூரிக்கும் நிதி ஒதுக்கப்பட்டு அங்கே பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவேகூட, சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். தற்போது, துறை மூலமாக அந்தப் பணியை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் சென்ற ஆட்சியில் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் சரியாக நடைபெறவில்லை என்ற விவரம் அரசின் கவனத்திற்கு வந்ததையடுத்து அந்தப் பணிகளையெல்லாம் விரைந்து முடித்து, கூடியவிரைவில் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக பல கோடி ரூபாயைக் கொடுத்து ஏழை விவசாய மக்களுக்கெல்லாம் விடிவெள்ளியாகத் திகழ்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரம்பலம் ஊராட்சியில் மருத்துவர் ஒருவர் தனது 12 ஏக்கர் நிலத்தை அரசுக்குத் தருவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளார். எனவே, அந்தப் பகுதியில் அரசு பாலிடெக்னிக் அமைத்துத் தருமாறு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மூன்றாவது முறையாக

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தவுடன் கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி, தமிழகத்தில் இதுவரை 10 பாலிடெக்னிக் கல்லூரிகள் உருவாக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையில், நாகப்பட்டினம் தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, வேதாரண்யம் தொகுதியில் கல்லூரிக்கு வேண்டிய இடத்தைக் கொடுப்பதற்கும் ஒருவர் முன்வருகிறார் என்கிற கருத்தையும் சொல்லியிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிர்காலத்தில் வேதாரண்யம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

இயற்கை உரம்

***28797—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு இயற்கை உரம் அதிக அளவில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு இயற்கை உரம் அதிக அளவில் கிடைக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள்மூலம், பசுந்தாள் உரம், நீலப்பச்சைப்பாசி மற்றும் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகம் செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.